நெஞ்சிலே ரத்தம் கொட்டும் நினைவே நெருப்பாகும் - எங்கள்
நெஞ்சினிலே தோழர்களின் தியாகத்திலே
மூத்தமகன் கிட்டு அவன் தோழர் குட்டிசிறி மலரவன் ஜீவா குணசீலன்
றொகானுடன் நாயகன் தூயவன் நல்லவன் அமுதனும்
இந்திய துரோகத்தால். கனலான செய்தியில்
நெஞ்சிலே ரத்தம் கொட்டும் நினைவே நெருப்பாகும் –
எங்கள் நெஞ்சினிய தோழர்களின் தியாகத்திலே 2

கடலம்மா.....எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா
எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா
கடலம்மா.....எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா 2
எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா

தேசவிடுதலைக்காய் தேசமெல்லாம் திரிந்த எங்கள்
நேசக் குழந்தைகளை நீசர் வழிமறிக்க(2)
கடலம்மா.....எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா 2
எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா 2

உலக கடற்பரப்பில் இந்தியப் பேயாட்சி
உண்மையைத் தின்னுமா? உலகம் மௌனமாகுமா?(2)
கடலம்மா.....எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா 2
எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா

தாயகப் பயணத்திலே தம்பி கிட்டு தோழருடன்
தியாக வேள்வியிலே தணலாகப் போகையிலும்(2)
கடலம்மா.....எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா 2
எங்களுக்கு நீதி சொல்ல எவருமில்லையா

வானும் கடற்பரப்பும் உலகமதும் உள்ளவரை தாயகத் தாகம்
தணிவதில்லை எந்த தடையிலும் பயணம் நிற்பதில்லை(2)
எங்கள் தம்பி கிட்டு தோழர் மீது ஆணையம்மா 2
எங்கள் தம்பி கிட்டு தோழர் தேசம் நாளைம்மா
நெஞ்சிலே ரத்தம் கொட்டும் நினைவே நெருப்பாகும் – எங்கள்
நெஞ்சினிய தோழர்களின் தியாகத்திலே